புதிய முதலீடுகள் எங்கே? வெறும் ரீல்ஸ்தான் உள்ளது! முதலீடுகள் இல்லை! இலண்டன் பயணம் மூலம்

# தமிழ்நாட்டுக்கு அவமானத்தை உண்டாக்கி உள்ளார், முதல்வர் விஜய்!

## த.வெ.க. அரசு ஈர்த்ததாகச் சொல்லப்படும் முதலீடுகள் பற்றி - முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா செய்தியாளர் சந்திப்பு!

**சென்னை, செப். 21 -**

**சென்னை-அன்பகத்தில், நேற்று முன் தினம் (செப்.18) முன்னாள் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அளித்த பேட்டி வருமாறு:-**

கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் தமிழ்நாடு மிகப்பெரிய பொருளாதார சரிவை சந்தித்த நெருக்கடியான சூழலில் ஆட்சிக்கு வந்த திராவிட நாயகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டின் பெயரை உயர்த்திப் பிடித்தார். ஒவ்வொரு நாளும் அவருடைய உழைப்பினால்தான் தமிழ்நாடு பன்மடங்கு வளர்ந்துள்ளது. ஐந்தாண்டு காலம் நல்லாட்சி வழங்கிய எங்கள் தலைவர், ஏறத்தாழ 12 இலட்சம் கோடி ரூபாய்க்கான முதலீடுகளைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டுவந்து குவித்தார்.



**ரீல்ஸ் மோகத்தில் தமிழ்நாடு!**

இந்தியாவுக்குள்ளும், ஒட்டு மொத்த உலக நாடுகளிலிருந்தும் பல இலட்சம் கோடி ரூபாய்க்கான முதலீடுகளைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டுவந்து சேர்த்த பெருமை மு.க.ஸ்டாலின் அவர்களுக்கே சாரும். அப்படி கழகத் தலைவர் ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டை உச்சத்தில் கொண்டு நிறுத்திய காலம் நிறைவடைந்து , இன்றைக்கு ரீல்ஸ் மோகத்தினால் தமிழ்நாட்டின் தலையெழுத்து மாறி உள்ள இந்த நேரத்தில், வெறும் ரீல்ஸ் போடு வதற்காகத்தான் UK சென்றார்களோ என்று யோசிக்கத் தோன்றுகிறது.

முதலமைச்சர் முதல் முறை யூகே போனாங்க. ரொம்ப சந்தோஷமா இருந்துச்சு. உண்மையாகவே வந்த உடனே இன்வெஸ்ட்மென்ட் ப்ரொமோஷ னுக்கு தானே கையில எடுத்துக்கிட்டு வெளிநாடுகளுக்கு போறாரு அப்படின்னு நாங்க எல்லாம் ரொம்ப சந்தோஷப்பட்டோம். இன்ஃபேக்ட் நான் பதிவே போட்டிருந்தேன். ஆல் தி வெரி பெஸ்ட் நல்லபடியா போயிட்டு வாங்க, நல்ல இன்வெஸ்ட்மென்ட்ஸ் கொண்டு வாங்கன்னு சொன்னோம். ஆரம்பம் முதல்லே எங்கள் தலைவர் அவர்கள் ரொம்ப தெளிவா சொல்லி இருக்கார். இன்வெஸ்ட்மென்ட் ப்ரமோ ஷன்ல அரசியல் இருக்கக்கூடாது. ஏன்னா இது தமிழ்நாட்டின் எதிர்காலம் தமிழ்நாட்டோட இளைஞர்களின் எதிர்காலம். நாங்களும் அதேதான் மெயின்டைன் பண்ணியிருக்கோம்.

**புதிய முதலீடுகள் எப்போதுதான் வரும்?**

இன்வெஸ்ட்மென்ட் ப்ரொமோ ஷன் ட்ரிப்புக்கு போறாரு. அங்க இருந்தாவது ஏதாவது நல்ல செய்தி வரும்னு பார்த்தோம். ஆனா அங்கேயும் நான் சொன்னது போல ரீல்ஸ் தான் வந்துச்சு. இன்வெஸ்ட்மென்ட் வந்த மாதிரி தெரியல. எப்படி இங்க இன்வெஸ்ட்மென்ட் கான்கிளே ஒன்னு நடத்துனாங்களோ. அந்த வெத்து இன்வெஸ்ட்மென்ட்கான்களே மாதிரியேதான் இப்போ இன்னொரு காமெடி தான் நடத்திட்டு வந்திருக்காங்க. இங்க நடத்தின கான்கிலே ஒரு லட்சம் கோடி ரூபாய் கணக்கு சொன்னாங்க, ரூ. 63,000 கோடி கணக்கு காமிச்சாங்க. அதுல வந்தது எல்லாம் எங்களால வந்தது என நான் ஏற்கனவே பிரஸ் மீட்டில் சொல்லியிருக்கேன்.

நீங்க அப்படியே அது எல்லாம் உங்களதுன்னே சொல்லிக் கொள்ளுங்கள். எங்களுக்கு அதில் கூட பிரச்சினை இல்லை. ஆனா எப்பதான் புதுசா கொண்டு வருவீங்க.? எப்பதான் புதிய புதிய முதலீடுகள் தமிழ்நாட்டை நோக்கி வரும்.? என்ற கேள்வி எழுகிறது.

முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எந்த ஒரு வெளிநாட்டு பயணத்துக்கு போனாலும் பத்திரிகையாளரை சந்தத்தித்துவிட்டு என்ன செய்ய போகிறோம் என கூறிவிட்டு செல்வார். அங்கே நடக்கும் நிகழ்வுகள் அனைத்தும் தினமும் ப்ரெஸ் ரிலீஸ் கொடுப்போம். அதேபோல திரும்ப வரும்போதும் ப்ரெஸ் மீட் பண்ணி என்ன இன்வெஸ்ட்மெண்ட் வந்திருக்குனு சொல்லுவார்.

ஆனா அவர்கள் போகும்போதும் சரி வரும்பொழுதும் சரி முதலமைச்சர் எப்பவுமே பிரஸ்ஸ மீட் பண்ணல. மினிஸ்டர் ஏதாவது மீட் பண்ணி சொல்லி இருக்கலாம்ல்ல அதுவும் இல்லை. அப்படி பிரஸ்ஸ உதாசீனம் படுத்துறவங்களை தான் நீங்கள் எவ்வளவு பேர் தூக்கி கொண்டாடுறீங்கன்னு எங்களுக்கு நல்லா தெரியும். ஆனா உங்கள் பின்னாடியே நின்னு ஜனநாயகத்தின் மிகப்பெரிய தூண் இந்த மீடியாவை ப்ரொடெக்ட் பண்ணனும் நிற்கிற ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் தான்.

ரூ.15,300 கோடி முதலீடு ஈர்த்திருப்பதா சொன்னாங்களா, அதில் முதலில் ரூ.3000 கோடி ஒருத்தர் வரும்னு சொல்றாரு. எனக்கு ஆசையா இருக்கு, தமிழ்நாட்டுல இன்வெஸ்ட் பண்ணனும்னு சொல்றாரு என்கிறார்கள். இந்த கதைல்லாம் யாருக்கு வேணும்? Mou sign போட்டாங்களா இல்லையா? வெறும் letter of interest மட்டும் காட்டணும்னா, நான் இன்னும், 10 லட்சம் கோடிக்கு மேல காமிச்சிருப்பேன். ஆக அதை கணக்குல சேர்க்க முடியாது அந்த 3000 த்தை எடுத்து ஓரம் காட்டுங்க. அந்த 3000 என்னன்னு எனக்கு நல்லா தெரியும். அது வரணும் அது ஏன் வரலன்னு எனக்கு தெரியல. ஏன்னா நாங்க எல்லாம் பேசி வச்ச ஒரு முதலீடு அது. அது என்ன ஆச்சுன்னு தெரியல. அதுவாக இருந்தால். அது ஏன் கொண்டு வரவில்லைன்னு தெரியல. இது புதுசா இருந்தா பரவாயில்லை.

**தமிழ்நாட்டிற்கே அவமானம்!**

மீதி ரூ. 12,300 கோடில ஒரே ஒரு நிறுவனம் ரூ. 11,000 கோடி 89% ஒரு நிறுவனம் அது மதர்சன் நிறுவனம் ஏற்கனவே 30 கம்பெனி இங்க வச்சிருக்கான். ரொம்ப பெரிய நிறுவனம் ரொம்ப அற்புதமான நிறுவனம் நம்ம தமிழ்நாட்டோட மிகப்பெரிய பார்ட்னர் ரொம்ப நல்ல கம்பெனி. தமிழ்நாட்டோட முதலமைச்சர யார் கூட சார் போய் உட்கார வைப்பீங்க? அந்த இடத்துல மீட்டிங்ல யார் வந்தது? 11,000 கோடி ரூபாய் இன்வெஸ்ட் பண்ற இடத்துல யார் வந்து சைன் பண்ணனும்? நீங்க அப்படி உங்களுக்கு சி.இ.ஒ. ஒரு ஹை லெவல் ஆபீசர் வர முடியலன்னா எதற்காக ஒரு ஒரு கம்யூனிகேஷன் மேனேஜர் ஒரு சும்மா மார்க்கெட்டிங் மேனேஜர வச்சு சைன் பண்றீங்க. இங்க சி.இ.ஓ. சொன்னா நேரா வரப்போறாங்க . இங்க தலைமை செயலகத்துல உட்கார வச்சு சீப் மினிஸ்டர பார்த்து MOU சைன் பண்ணி இருக்கலாம். CEO இங்க டெல்லில தான் இருக்காங்க. தமிழ்நாட்டுக்கே அவமானம் . அது மட்டுமில்லாம அவர் தங்கின ஹோட்டலுக்கு முன்பு ஹாஸ்பிடல் இருக்கு அது கூட தெரியாம அத்தனை பேர் கூடி என்ன மாதிரி நடந்திக்கிட்டாங்க. ஒரு ஹாஸ்பிடல் எதிர உட்கார்ந்து இப்படியா கூத்தடிக்கிறது அந்த அறிவு கூட அங்க இருக்கற அந்த மக்களுக்கு இல்லையா.? இத்தனை நாளா வேற மாநில மக்கள் எல்லாம் குறை சொல்லுவாங்க ஆனா தமிழர்கள் எல்லாம் கொண்டாடுவாங்க. இன்னைக்கு தமிழர்களோட பேரை இப்படி பண்ணிட்டீங்களே.

"நீங்க கார் ரேஸ் தான் பார்க்க போகணும்னா சொல்லிட்டு போயிருக்கலாமே, என்ன இப்ப உங்களுக்கு? இன்வெஸ்ட்மெண்ட் கொண்டு வறேன் F1 கொண்டு வரேன்னு சொல்றாங்க, ரொம்ப சந்தோஷம். நான் பெரிய F1 ஃபேன். F1 கொண்டு வரேன்னு சொல்றீங்க, எங்க, இன்றைய எதிர்க்கட்சித் தலைவர், அன்றைய துணை முதலமைச்சர், இந்தியாவில் எங்கேயுமே நடக்காத அளவுக்கு சிங்கப்பூர்ல நடக்குற நைட் ரேஸ் மாதிரி F4 ரேஸ் இங்க சென்னையில, ஒரு டிக்கெட்டும் யாரும் வாங்க வேணாம், என் மக்கள் வந்து பார்த்து ரசிச்சு, இதெல்லாம் இப்படி இருக்கு பாருங்க, இங்க இருக்கிற நம்ம பிள்ளைகள் எல்லாம், இப்ப சின்ன கார் ரேஸ்க்கெல்லாம் போட்டி போடுற பசங்க எல்லாம் இருக்காங்களே, அவங்க எல்லாம் வந்து இதெல்லாம் பார்த்துத் தெரிஞ்சுக்கிட்டும், அடுத்தடுத்த கட்டத்துக்கு நம்ம பிள்ளைகள் வளரட்டும் அப்படின்ற ஒரு எண்ணத்துல இங்க போட்டியை நடத்துனத குறை சொன்ன கூட்டம் இது.

**2000 ஏக்கர் நிலம் எங்கே?**

ஆனா இன்னைக்கு நாங்க F1 கொண்டு வரப் போறோம் தமிழ்நாட்டுல சொல்றாங்க. வெரி குட், 2000 ஏக்கர் தேவை, அதை எங்கு கொண்டு வரப் போறாங்கன்னு கொஞ்சம் சொல்றாங்களான்னு பார்க்கணும். பரந்தூர் விமான நிலையம், ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்கே தேவைப்படுற ஒரு விமான நிலையம் அதுக்கு இடம் இல்லை, இடம் எடுக்க முடியாது, என சொல்கிற கூட்டம், இன்னைக்கு 2000 ஏக்கர் எந்த விவசாய நிலத்தை எடுக்கப் போறாங்க.?

ரூ.15,000 கோடி முதலீடு உண்மை இல்ல. அந்த 15,000 கோடி நம்பர் எங்க இருந்து வருது? அத பர்ஸ்ட் ஜிம் நடத்துனம் போது அம்மையார் அவங்களோட பிறந்த நாள் வரணும்ன்றதுக்காக ஒரு நம்பர கொடுத்துருந்தாங்க. அந்த மாதிரிதான் இருக்கு. போன வாட்டி நாங்க போயிட்டு வந்த போது 15,516 கோடி எடுத்துட்டு வந்தார் நம்ம முதலமைச்சர். 33 Mou மூலம் ரூ. 15,516 கோடிக்கான திட்டங்களை கொண்டுவந்து சேர்த்தார்.

ரூ.12,300 கோடி கணக்கு சொல்றாங்க அதுவும் நாங்க கொண்டு வந்த திட்டம்தான். இவங்க புதுசா கொண்டுவந்தா சேக்கல ஏற்கனவே நாங்க செய்து வச்சிருந்த அவங்க அனௌன்ஸ்மெண்ட் அவங்களோட பார்ட்னர்ஸ் ஹெல்மெட் நிறுவனம்ன்றது மே மார்ச் மாதத்தில அனௌன்ஸ்மெண்டே இருக்கு இப்ப நீங்க சொல்றீங்கள நீங்க கொண்டு வந்தீங்கன்னு. மார்ச் மாசத்துல அனௌன் ஸ்மென்ட் வந்துச்சு ஹெல்மென்ற உங்களோட பார்ட்னர்ஸ் ஹெல்மெட் லாஜிஸ்டிக்ஸ் ஏற்கனவே சொல்லிட்டாங்க. ஆன்லைன்ல இருக்கு பாத்துக்கோங்க மார்ச் மாசமே வந்துடுச்சு தேர்தல் வந்தத்தால எங்களால அறிவிக்க முடியல.

நான் கேக்கற ரெண்டு மூணு கேள்வி மட்டும் ரொம்ப முக்கியமான கேள்வி வில்சன் ஏற்கனவே இங்க இருக்கிற திட்டம்தான். சோ வில்சனையும் மதர்சனையும் சேர்த்துட்டீங்கன்னாகிட்டத்தட்ட 92% ஏற்கனவே இங்க இருக்கறது தான் அதுவும் ஏற்கனவே நாங்க பேசி வச்சதுதான் நீங்க உங்க கணக்குல இப்ப ஏதோ சொல்லிட்டு இருக்கீங்க. இதற்கு எதற்கு இவ்வளவு தூரம் போறீங்க அங்க போய் தமிழ்நாட்டு மானத்தை வாங்குறீங்க.

நாங்க முதலீடுகள் ஈர்த்தது மட்டுமில்லாமல் கன்வெர்ஷன் கான்குளே நடத்துனோம். இந்தியாவிலயே கன்வெர்ஷன் கான்கிளே நடத்தின ஒரே ஒரு மாநிலம் தமிழ்நாடு மட்டும் தான். சுமார் 80% ஜிம் எம்எஸ் 75% ஓவர்ஆல் எம்ஸ் வச்சிருந்தோம். எங்கள பார்த்து முதலீடு ஈர்க்க போனாரா முதலீடு செய்ய போனாரா? அப்படின்னு கேட்டாரு. இப்ப இவர் வேற என்னல்லாம் செய்ய போனாருந்தா எல்லாருமே கேட்டுட்டு இருக்காங்கங்க ரேஸ் பார்க்கறதுக்கு மட்டும் தான் டைம் இருக்குது. முதலீட்டாளர்கள பார்க்கறதுக்கு டைம் இல்ல கான்க்ளே நடத்துறதுக்கு டைம் இல்ல. நாங்க யூகே போயிட்டு வந்த உடனே 33 ஒப்பந்தங்கள் கையெழுத்து போட்டோம். 10 புதுசு மீதி இருக்கறது நிறைய வந்து இருக்கறத எக்ஸ்பான்ஷன் பண்ணி இருக்கோம். அந்த எக்ஸ்பான்ஷன் பண்ணது வந்து வெளிய வேற எங்கேயும் போகாம இருக்கறதுக்கு நாங்க அந்த வேலையை செஞ்சிருக்கோம். நாங்க 10 புதுசா கொண்டு வந்தோம். நீங்க அட்லிஷ் ஒன்னாவது கொண்டு வந்துருக்கீங்களா.?

முக.ஸ்டாலின் மாமனிதர் இத்தனை ட்ரிப் போனார் ஒரு முறை கூட அங்குள்ள தமிழர்களை சந்திக்காம வந்தது இல்லை. தமிழ்நாட்டின் CM ஆக போய் அங்கிருந்த நமது மக்களை அரவணைக்காம சந்திக்காம வந்திருக்கீங்க. அப்ப யாரை சந்திக்க போனீங்க என்ற கேள்வி வருது? தமிழ்நாட்டு மக்களை ஏன் பார்க்கல சார் நீங்கள்?

முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளிநாட்டு பயணம் போன போது எல்லாம் அங்குள்ள நமது தமிழ் மக்களை அரவணைத்து சந்திக்க தவறியதில்லை. அதற்கான ஏற்பாடுகளை முறையாக முன் கூட்டியே திட்டமிட்டு செய்தோம். ஆனால் தற்போது அதையும் செய்யவில்லை இந்த அரசு.


இவ்வாறு முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டியின்போது குறிப்பிட்டார்.

## அதானே!

"தி.மு.க.வோடு சேர்ந்து
கொண்டு அ.தி.மு.க.வை
அழிக்க நினைத்தார்கள்….
அதனால
" த.வெ.க.வில் இணைந்து
அ.தி.மு.க.வை
அழிக்கும் முடிவை நாங்கள்
எடுக்க வேண்டியதா
போச்சு..

இப்படிக்கு
ராஜினாமா
தியாகிகள்

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்




கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதியில் பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு ஊத்தாரை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் மூன்றாம்பட்டி எஸ்.குமரேசன் தலைமையில் பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. இதில் பேரூர் கழகச் செயலாளர் தீபக் என்கிற பார்த்திபன் மத்திய ஒன்றிய செயலாளர் எக்கூர்.செல்வம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எஸ் ரஜினி செல்வம், வி.கிருஷ்ணமூர்த்தி, தனிகை குமாரன் பேரூர் கழக அவை தலைவர் ஜெயச்சந்திரன் பாண்டியன், ஒன்றிய கழகத் துணைச் செயலாளர் மற்றும் வ.பரணி கலந்து கொண்டனர் மற்றும் திராவிட இயக்கத் தோழர்கள் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

**சிந்தனையைத் தூண்டிய திராவிட எழுத்துகள்:**

# நடமாடும் கல்லூரி – நல்லறிவுக் கல்லூரி

# ஏ.வி.பி. ஆசைத்தம்பி!



**நடமாடும் கல்லூரி! நல்லறிவுக் கல்லூரி! நாட்டிலே நல்லறிவை, நல்லறிவுணர்ச்சியைப் பரப்பிடும் பணிபுரிந்திடும் கல்லூரி - நடமாடும் கல்லூரி எங்கள் இயக்கம்!**

**நடமாடும் கல்லூரி! பட்டிதொட்டி, நாடுநகரம் குழந்தை முதல் கிழவர் வரை மனித மனம் படைத்த மனிதரின் எண்ணங்களிலெல்லாம் ஊறிப் பதிந்து விட்ட கல்லூரி - நடமாடும் கல்லூரி!**

**அறிவின் ஆரம்ப காலந்தொட்டு இன்றுவரை அழியாத அழிக்க முயன்றும் அழியாத, அழிக்கவே முடியாத அறிவுக் கல்லூரி - நல்லறிவுக் கல்லூரி - நடமாடும் கல்லூரி!**

மனிதர் மனிதராக வாழ - மனிதர் மிருகங்களின் நாள் வேறுபட்டு, கொடுமைகளுக்கிடையே அன்பும் அருளும் அறிவும் ஆராய்ச்சியும் பெற்றுப் புது வாழ்வு - பொதுவாழ்வு வாழ வழிகாட்டுகிறது - எங்கள் நடமாடும் கல்லூரி!

சரித்திரகாலத்திற்கு முன்பிருந்துப் பலர், மனித இனம் மறந்துபோன பலர், இந்த நற்பணியை-நல்லறிவுப் போதனையை - நல்லறிவுக் கல்லூரியை நடத்தி வந்தனர்.

அன்றுதொட்டு இன்று வரை நல்லறிவுக் கல்லூரி நடமாடும் கல்லூரியாக உலகெங்கும் நாடெங்கும் - அறிவின் தூதர்கள் மூலம் நிலவி வருகிறது - நடமாடி வருகிறது.

இத்தகைய அறிவின் தூதர்களின் வழி வந்தவர்கள் உலகின் எப்பகுதியிலும் எல்லாக் காலங்களிலும் தோன்றித் தொண்டு செய்து வந்துள்ளனர்!

**சிந்தனைச் சிற்பி சாக்ரடீஸ், சிந்தித்த காரணத்திற்காக, பிறரையும் சிந்திக்கத் தூண்டியதற்காக, நஞ்சு தரப்பட்டார் என்பதும், அப்போதும் அவர் மனமகிழ்ச்சியோடு மாண்டார் என்பதும் சரித்திரங்கண்ட உண்மையாகும்.**

**நஞ்சு குடித்து, குடிக்கும்படி செய்யப்பட்டு மடிந்த சிந்தனையாளன் சாக்ரடீஸ் வகுத்த வழியும், போதித்த நல்லறிவுக் கருத்துக்களும் அவருடன் சேர்ந்து தத்துவஞானி அரிஸ்டாட்டில், அரசியல் அறிஞன் பிளேட்டோ - ரூஸோ - வால்டேர் - கலிலியோ, இயேசு, புத்தர், முகம்மது நபி, உலகப் பெரியார் காந்தி முதலிய பலர் பல காலங்களிலும் நல்லறிவுக் கல்லூரியின் மாணவர்களாக-நாளடைவில் அதன் ஆசிரியர்களாகவும் பேராசிரியர்களாகவும் விளங்க - நாட்டிலே, உலகிலே மேலும் மேலும் நல்லறிவை - நல்லறிவுக் கருத்துக்களைப் பரப்பி-பலரைத் தமது வழி நடத்திப் பண்படுத்திச் சென்றதைக் கண்டோம்.**

**எங்களுக்கு (திராவிட இயக்கத்திற்கு) எதிராக, பழமைப் பிரச்சாரம் பலமாக இப்போது நடைபெற்று வருகிறது, நாடெங்கும்!**

எதிர்ப்பு, ஏளனம், ஏசல், பூசல், தூற்றுதல், பாணங்கள், கேலிமொழிகள், கிண்டல் விளக்குகள், பழமை, மதம் பக்தியும், பற்றும் கொண்டு போதை ஏறிய மக்களின் கோபாவேசம் ஆகிய அத்தனையையும் அன்புமுறையில், அறிவையே ஆயுதமாகக் கொண்டு தாங்கி, எதிர் நீச்சலடித்து, எதிர்ப்பிலே வளரும் இயக்கம், எங்கள் இயக்கம்!

சாதாரண மக்களிடையே நடமாடும் அறிவியக்கம்-எங்கள் இயக்கம்.

நல்லறிவு பரப்பிடும் இந்த இயக்கத்தை - நடமாடும் கல்லூரியை இடித்துவிட, முடித்துவிட, பழமை விரும்பிகள் - சுயநலமிகள் - ஆதிக்கக்காரர்கள் - சுரண்டி வாழ்வோர் பலப்பல விதங்களிலே முயன்று வருகின்றனர்.

எத்தகைய முயற்சிக்கும் முறிந்து போகக்கூடிய கல்லல்ல, இந்த நடமாடும் கல்லூரி!

நல்லறிவும் - நல்லெண்ணமும் கொண்ட மனித மனம் படைத்த பொதுநலத் தொண்டர்கள் மட்டுமல்ல,

பொழுது போக்காக உழைப்பவர்கள்கூட எப்பொழுதும் பணிபுரியும் முறையிலே எங்கள் இயக்கம் அமைந்துள்ளது.

இதனைப் பழிக்க எவராலும், எத்தகைய சக்தியாலும், எப்போதும் முடியவே முடியாது, என்பது மிகமிக உறுதி!

தனிப்பட்ட சிலரது வாழ்விலே குறுக்கிட்டுக் கோலாகலம் விளைவித்து, தனிமனிதரை வேண்டுமென்றால் துன்புறுத்தலாம்.

ஒரு சில உடையார்பாளையம் வேலாயுதங்களைப் பிணமாக்கி, மரக்கிளையிலே தொங்கவிடலாம். மஜீத் – பாண்டியன் போன்று படுகொலை செய்யப்படலாம். வேறு என்ன முடியும்?

அன்றுதொட்டு, இன்று வரை, உலக வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால், அறிவின் தூதர்கள் ஒருவர் ஒருவராக அழிக்கப்பட்டாலும் கொடுமைக்கு – கோர காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டாலும், அவர்கள் - அந்த அறிவின் தூதர்கள்தான் மாண்டனரே தவிர, அவரது எண்ணங்கள், மக்களின் நல்வாழ்வுக்கான கருத்துக்கள் மறையவில்லை – மாறாக, மேலும் மேலும் பலவாக அறிவுரை –
அறிவின் தூதர்கள் நாட்டுக்கு உலகு தந்தன என்பதைக் காணலாம்.

கடவுள், மதம் - ஜாதி பேதம், பழக்கவழக்கம் ஆகிய துறைகளிலே மாற்றல் - அடைந்து மறுமலர்ச்சி பெற்று, 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்று மனவளத்துடனும், மனவலிமையுடனும் தன்னம்பிக்கையைக் கொண்டவராகவும் – தன்மானமிக்கவராகவும் – திராவிடர் வாழ வேண்டும்.

இந்த நல்லெண்ணிலமைக்கு நாட்டு மக்கள் பண்பட்டு பக்குவப்படுத்தித் தருவாயா? நல்லதொன்று செய்து வருவது யார்? – எங்கள் நடமாடும் கல்லூரி!

தமிழன் எண்ணத்துறையிலே பண்பட்டவராகவும், அதே நேரத்தில், தன்னையும், தனது இனத்தையும், தன் நாட்டையும், தனது நாட்டின் இயற்கையையும் அடிமை நிலையையும் உணர்ந்து அதற்கான எல்லாவித தியாகத்தையும் செய்யத் தயாராக வேண்டும்.

**நாம் யார்? நமது நாடு எது? என்பதை உணர வேண்டும். நடமாடும் கல்லூரியின் முக்கியப் பணிகளிலே நமது நாட்டை நாமே ஆளவேண்டும் – அதற்கான பணிபுரிந்தாக வேண்டும் என்பது மிகமிக முக்கியமாகும்.**

**அதற்கான பயிற்சி, போர்ப்பணி – புத்தறிவுப் பாதையை நடமாடும் கல்லூரியின் பேராசிரியர் அறிஞர் அண்ணா காட்டுகிறார் – அதன்வழி – அண்ணா காட்டும் அறப்போர் வழி நடப்போம் – வாரீர்!**